விலை ரூபா 1–25

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 மார்கழி 19 ரபி - ஆகி 11 இதழ் 320
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 3–1–85

சாவகச்சேரி தபாலகத்தில் முத்திரை, பணம் கொள்ளை!

மீசாலை, கொடிகாமம் தபாலகங்களிலும் சம்பவம்

(சாவகச்சேரி)

இனந்தெரியாத ஆறு துப் பாக்கி இளைஞர்கள் நேற்று நண்பகல் சாவகச்சேரி தபால் அலுவலகத்துக்குள் புகுந்து பெறுமதியான முத்திரைகளும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

தபால் அலுவலகத்தின் முன் பக்கக்கதவுகள் பூட்டப்படிருந்தபோதும்- இளைஞர் கோஷ்டி பின்பக்கக் கதவினூல் உட்புகுந்தே இக் கொள்ளையை மேற்கொண்டனர் என வும் கொள்ளையடிக்கப்பட்ட முத்திரைகளும்- பணமுமாக சுமார் 4000 ரூபாவாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

இதேவேளை கொடிகாமம், சரசாலை தபால் அலுவலகங்களிலும் சாவகச்சேரி பலநோக்

[6ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

11 இளைஞருக்கும் என்ன நடந்தது?

(கொழும்பு)

பண்டத்தரிப்பில் ராணுவத் தினரால் கைது செய்யப்பட்ட இளைஞர்களின் நிலை குறித்து அவர்களின் பெற்றோருக்கு தெரிவிக்குமாறு வட்டுக்

(6ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

சென்னை திரும்பியபின்னரே எம்.ஜி.ஆர். பதவியேற்பார்!

காபந்து அமைச்சரவை தொடர்ந்திருக்கும்

(சென்னை)

தமிழக முதல்வராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ள திரு. எம். ஜி. ராமச் சந்திரன் அமெரிக்காவிலிருந்து சென்னை திரும்பிய பின்னரே பதவிப்பிரமாணம் செய்து கொள்வார்.

நியூயோர்க் மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவரும் அவர் அடுத்தமாத முதல் வாரத்தில் சென்னைவருவார் என்று எதிர்பார்க்கப்படுவதால் அதுவரை தற்போ துள்ள காபந்து அமைச்சரவை தொடர்ந்து பதவியிலிருக்கும்.

இத்தகவல்களை நேற்று மாலை புதுடில்லியிலிருந்து சென்னை திரும்பிய நிதி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

திரு. ராமச்சந்திரன் தமது வசதிக்கேற்ப பதவிப்பிரமாணம் செய்துகொள் வார் என்றும் அவர் தெரிவித்தார் அமைச்சரவை முன்னர் ராஜினாமாச் செய்த போது அடுத்த அமைச்சரவை அமைக்கப்படும்வரை பதவியிலிருக்குமாறு ஆளுனர் கேட்டிருந்ததால் தற்போதுள்ள காபந்து அமைச்சரவை தொடர்ந்து இருப்பதில் பிரச்னை எதுவும் இருக்காது என்றும் அவர் கூறினர்.

இதேவேளை முதல்வரை நேரில் சந்திப்பதற்காக அமைச்சரவை குழு ஒன்று நியூயோர்க் செல்லவிருப்பதாகவும் அவர் கூறினர்.

தமிழ்நாட்டில் நடைபெற்ற சட்டசபை, லோகசபைத் தேர்தல் குறித்து நேரில் வாழ்த்துக்களைத் தெரிவிக்க நியூயோர்க் புறூக்ளின் மருத்துவமனைக்கு வந்திருந்த பிரமுகர்களுக்கு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனும் மனைவி திருமதி ஜானகி ராமச் சந்திரனும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதை இங்கு காணலாம்.

★ இலங்கைப் பிரச்னையில் ராஜீவின் முதற்பணி

★ சத்வால் விரைந்தார்

புதுடில்லியில் நாளை மகாநாடு!

(இ. கந்தசாமி)

இந்திய வெளிவிவகார அமைச்சிலிருந்து கிடைத்த அவசர அழைப் பைத் தொடர்ந்து, இலங்கைக்கான இந்தியத்தூதுவர் திரு. எஸ். ஜே. எஸ். சத்வால் நேற்று மாலை புதுடில்லி விரைந்தார்!

இந்தியாவின் புதிய பிரதமராக பதவிப் பிரமாணம் செய்துகொண்ட திரு. ராஜீவ் காந்தி வெளிவிவகார அமைச்சுப் பொறுப்புக்களையும் தாமே ஏற்றுக் கொண்ட பின்னர், வெளிவிவகார அமைச்சில் அவர் ஆற்றிய முதற்பணி இலங்கைப் பிரச்னை குறித்து ஆராய்வதற்கு மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்ததாகும். இதைத்தொடர்ந்தே திரு. சத்வால் அழைக்கப்பட்டுள்ளார்.

(6ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

அமிருக்கும் அழைப்பு?

[சென்னை]

கொழும்பிலிருந்து நேற்று மாலை பயணமான இந்தியத் தூதுவர் திரு எஸ்.ஜே.எஸ். சத்வால் புதுடில்லி செல்லும் வழியில் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு அமிர்தலிங்கத்தை சென்னையில் இன்று சந்திப்பார்.

திரு சத்வால், தமிழக நிதி அமைச்சர் திரு. இரா நெடுஞ் செழியன், சபாநாயகர் திரு. ராஜாராம் ஆகியோரையும் இன்று சந்திப்பார்.

இதேவேளையில் திரு. ஜி. பார்த்தசாரதி நேற்று திரு அமிர்தலிங்கத்துடன் தொலை பேசியில் தொடர்புகொண்டு பேசினர்.

புதுடில்லியில் நாளை நடை பெறவுள்ள இலங்கைத் தமிழர் பிரச்னைபற்றிய மாநாட்டில் கலந்துகொள்வதற்கு எந்த நேரமும் அழைப்பு வரலாம் என்று திரு. அமிர்தலிங்கம் எதிர்பாத்தவண்ணமிருக்கிறார் என தெரிகிறது.

ஹெலிகொப்டரிலிருந்து துண்டுப் பிரசுர 'மழை'

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர்மேலாக நேற்று நண்பகல் தாளப்பறந்து கொண்டிருந்த 'ஹெலி கொப்டரிலிருந்து' ஏராளமான துண்டுப்பிரசுரங்கள் குவியல் குவியலாக வீசப்பட டன.

ஹெலிகொப்டர் தாளப்பறந்து கொண்டிருந்தபோது பீதியினல் பொதுமக்கள் நாலாபக்கமும் கிதறி ஓடத் தொடங்கினர்கள்.

'ஆயுதங்கள் பற்றியதகவல் கொடுப்போருக்குச் சன் மானம் வழங்கப்படும் என்ற சாராம்சத்தில் அப்பிர சுரம் அச்சடிக்கப்பட்டிருந்தது. (மா)

புதுடில்லி செல்வார்

(கொழும்பு)

ஜனதிப யின் விசேட பிரதி நிதியாக அமைச்சர் திரு நிஸங்க விஜயரத்ன அல்லது அமைச்சர் ஜனப் ஏ ஸி. எஸ் ஹமீட் விரைவில் புதுடில்லி செல்வார் என்று நம்பகரமாக தெரிகிறது.

இதுகுறித்து அரசின் உயர் மட்டத்தில் முடிவெடுக்கப்பட் டுள்ளதாக தெரிகிறது.

"ரயில் பாதை தகர்ப்பால் பொது மக்களே பாதிப்பு"

அமைச்சர் அல்விஸ் விளக்கம்

[கொழும்பு]

"வடபகுதி பயங்கரவாதி கள் தங்களது சொந்த மக்களுக்கே உணவு உடை மற்றும் அத்தியாவசிய பொருட்களை கிடைக்கவிடாமல்செய்வ தை நோக்கமாகக்கொண்டு செயல் பட்டுவருகின்றார்கள்"

வடபகுதியில் ரயில் பாதை குண்டுவைத்து தகர்க்கப்பட் டது சம்பந்தமாக நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டதின் பின் பத்தி ரிகையாளர்மத்தியில் ராஜாங்க அமைச்சர் திரு ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் உரையாற்றுகை யில் இவ்வாறு தெரிவித்தார்.

இச்சம்பவத்தின் மூலம் தீவிர வாதிகள் எண்ணுவதுபோல்

இராணுவத்தினருக்கு எவ்வித (6ம் பககம் 5ம் கலம் பார்க்க)

நந்தாமத்யூ மறுப்பு!

(கொழும்பு)

புதியதொழில் அமைச் சராகமுன்னாள் அமைச்சர் திரு. சிறில்மத்யூவின் புதல்வர் திரு. நத்தாமத்யூ நியமிக்கப்பட்ட போதிலும் அவர் அதனை ஏற்க மறுத்துவிட்டதாக நம்பிக்கை யான அரசவட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் ஜனதி பதியைச் சந்தித்து அவர் நீண்டநேரம் பேசியதாகவும் தெரிகிறது.

சாவகச்சேரி நீதிமன்றம்---

இரண்டாவது தடவை சேதம்;

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிமன்றம்

நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத இளைஞர் கோஷ்டியினல் இரண்டாவது தடவையாக சேதத்துக்குள் ளாக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 7-45 மணியளவில் இரும்புக் கம்பிகள் சகிதம் வந்திறங்கிய சுமார் 15 இளைஞர்கள் அங்கு காவலுக்கு நின்ற இரவுக்கா

(6ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

தமிழகத்தில் விசாரணை!

(சென்னை)

யாழ்ப்பாணத்தில் கடத்திச் செல்லப்பட்ட இரண்டு பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள்

(6ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

அரிவளம்பரம்

விற்பனைக்கு

Pyrex Dinner Set 24 Pieces விற்பனைக்கு உண்டு. ஒரு சில நாட்கள் மட்டும் பாவிக்கப் பட்டது. தொடர்பு:- 22/2 ஆஸ்பத்திரி வீதி கொட்டடி யாழ்ப்பாணம். 1200

H.-F. கைபை மியூசிக் சென்ரர் V.H.F T.V ரிவி. வீடியோடெக் 2 ரைப் ரைற் றர் மைக்றே வேவ் அவண் கிற்றாச்சி 3-ஸ்ரார் குளிர் சாத னப்பெட்டி, கென்வூட் செவ் (chef) ரொசீபா காஸ்குக்கர், 3 in one, றைஸ்குக்கர் மின் விசிறி மற்றும் மின் சார உபகரணங்கள். சண் முகம் புடவை மாளிகை ஆடிய பாதம் வீதி நல்லூர்ச் சந்தை கல்வியங்காடு. 1199

தேவை

மணிக்கூடு திருத்துவதில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்கு தேவை. அனுபவத் திற்கு ஏற்ப சம்பளம் வழங் கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். 44, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 1196

WANTED

A part - time English typist for Sri Subramaniya Ashram, Alaveddy. Apply Secretary before 15 - 1 - 85 1188

தவறிவிட்டது

தம்பிஐயா இராமச்சந்திரன் புரட்டாசித் (காட்டம்(இறம் பொடை) ஆசிரியர். அடை யாளஅட்டை சுன்னாகம் ஊரெ முவிற்கிடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மேற் குறிப்பிட்ட விலாசத்தில் கொடுக்கவும். 1204

WANTED IMMEDIATELY
THEATRE NURSE

Applications are being called for a qualified Theatre Nurse or a Hospital train d Theatre Nurse for employment in the Unified Medical Service of the Jaffna Diecese of the Church of South India. For further Particulars contact the Acting Medical Superintendent, Green Memorial Hospital, Manipay.

Actg. Medical Superintendent,
Green Memorial Hospital,
Manipay. 1192

WANTED IMMEDIATELY

MEDICAL OFFICER WITH ANAESTHETIC TRAINING

Applications are being called for Resident Medical officer with Anaesthetic Training for employment in the Unified Medical Service of the Jaffna Diecese of the Church of South India. For further particulars c ntact the Acting Medical Superintendent, Green Memorial Hospital, Manipay.

Actg. Medical Superintendent,
Green Memorial Hospital,
Manipay. 1191

31ம் நாள் நினைவஞ்சலி

அமரர் திரு. கருப்பையா அச்சுதன்

(ஆசாரி)

யூ. கே. இஞ்சினியரிங் (இன்டஸ்றீஸ்)
உரிமையாளர், உயிலங்குளம்.

மலர்வு: 11-7-1951 உதிர்வு: 4-12-1984



அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், அறி வின் சுடராய், பாசத்தின் பிறப்பிடமாய், வாழ்வின் வழிகாட்டியாய், குடும் பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து அனைவரின் இத யங்களிலும் நீங்கா இடம் பெற்று எல்லோரையும் தாங்கொணாத் துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென அணைந்துவிட்ட எங்கள் அண்ணயா ஜோதியே!

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும், உங்கள் நினை வும், துயரும் எம்மை விட்டு என்றும் அகலாது உங் கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அனைவரையும் அன்னரின் அந்தியேட்டிக் கிரியை களில் கலந்து கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடை யப் பிரார்த்திக்குமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

1193

தாக்குதல்

சம்பவம்

(கிளிநொச்சி)

சாரமும் சேட்டும் அணிந்த கோஷ்டியினர் நேற்று முன் தினம் கிளிநொச்சியில் பொது மக்களை தாக்கியதால் சிலர் காயமடைந்தனர். (க)

சுபிட்சம் வேண்டி வழிபாடு

(சுண்டுக்குளி)

நவாலி அருள் விளங்கு அத் திரான் முருகமூர்த்தி கோவி லில் நமது நாடு சுபிட்சம் அடையவேண்டும் என்றும், தமிழ்மக்கள் இன்னல் தீரவும், நிம்மதியான வாழ்வை வேண் டியும், அக்கினி வழிபாடும் விசேட அபிஷேகமும் அர்ச்சனை யும் வேதம் ஓதலும், வேதபா ராயணம் என்பனவும் பக்தி சிரத்தையோடு அனுஷ்டிக்கப் பட்டது.

கொள்ளை

[மாவிட்டபுரம்]

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் காங்கேசன்துறை கிளையில் 2-வது தடவையாக வும் கொள்ளையடிக்கப்பட்டுள் ளது.

வான் ஒன்றில் வந்த ஆயு தம் தாங்கிய இளைஞர்கோஷ்டி மேற்படி கிளையில் கடமையி லிருந்தவர்களை மிரட்டி 361 ரூபா 8? சதத்தை கொள்ளை யடித்துச் சென்றுள்ளதாக யாழ் பொலிஸ்பிரிவில் முறைப் பாடுசெய்யப்பட்டுள்ளது.

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

மணல்பிட்டி, காரைநக ரைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை சுப்பிரமணி யம் என்பவரது மரணசாத னமற்ற மரணச்சொத்தின் விடயத்தில்

— மரணமெய்தியவர்

தம்பிப்பிள்ளை சுப்பிரமணி யம் கைம்பெண்விசாலாட்சி, மணல்பிட்டி, காரைநகர்.

— மனுதார்

வழ. இல.ரி/3843

எதிராக

பாதுகாவலர் (1) சுப்பிர மணியம் குமரகுருநாதன் பராயமற்றவர் (2) பவள மலர் சுப்பிரமணியம், மணல்பிட்டி, காரைநகர்.

—எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற் கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத் தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985 ஆம் ஆண்டு தை மாதம் 25ந் திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக் கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்.

1984ம் ஆண்டு ஐப்பசி மாதம் 12ம் திகதி.

மன்றின்கட்டளைப்படி
K. KULASINGHAM
பதிவாளர்

வரைதல்;
செ. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி
(1175)

உங்களுக்கோர்

அரிய சந்தர்ப்பம்!

பேர்லின் (BERLIN) செல்ல

விரும்புவோர் உடனடியாக
எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

பயணம் செய்வோர் உங்கள் ஆசனங்களை
குறைந்த கட்டணத்தில்
பதிவு செய்து பெற்றுக்கொள்ளுங்கள்.
யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுநாயக்கா செல்லும்வரை
பிரயாண வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்.

QUICKS ENTERPRISES
TRAVELS & TOURS
533, STANLEY ROAD, JAFFNA.

BRANCH:

Saraswathy Gardens,
CHURCH ROAD, CHAVAKACHCHERI
T. Phon: 273

45—வது நாள் நினைவு அஞ்சலி

செல்லத்துரை சிவப்பிரகாசம்

தோற்றம்:
26—11—1926
மறைவு:
20—11—1984

ராஜ நடை நடந்து வந்து நம்முடைய நன்மை விரும்பி நலம் கேட் கும் நல்லோனே நடராஜப் பெரு மானின் நற்பாதம் அடைந்து நற்கதி அடைய பிரார்த்திக் கிறோம்.

மனைவி, மகன், பெரு மக்கள், மருமக்கள்.

(1201)

2-வது ஆண்டு நினைவு தினம்

ஜெனனம்:
9—3—1931

திதி: 3—1—1985

சிவபதம்:
27—12—1982

அமரர் திரு. சிவன்முருகன் ஆச்சாரி அவர்கள்

(உரிமையாளர், முருகன் ஆபரண மஹால். சுன்னாகம்)

அன்பின் உருவமே! பாசத்தின் சுடரே!
எம்மை வாழ வைக்கும் தெய்வமே!

ஈசனடி சேர்ந்து ஆண்டு இரண்டு ஆனாலும் நீங்காத நினைவுடனே நெஞ்சில் வைத்து வணங்குறோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள், மைத்துனர்.

சுந்தரோடை வீதி, சுன்னாகம். (1187)

தமிழ்நாடு முதலமைச்சர் பதவிப்பிரமாணம்:

எம். ஜி. ஆருடன் ஆலோசனைநடத்த அமைச்சர்கள் குழு நியூயோர்க் செல்லும்!

சென்னை, ஜனவரி 2

தமிழ்நாடு முதலமைச்சரின் பதவிப் பிரமாண நடைமுறைகள் பற்றி திரு. எம். ஜி. இராமச்சந்திரனுடன் ஆலோசனை நடத்துவதற்காக தமிழக அமைச்சர்களின் குழுவொன்று இரண்டு மூன்று தினங்களில் நியூயோர்க் செல்லவுள்ளது.

இக்குழு நியூயோர்க் புறூக்லின் மருத்துவமனையில் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்குள்ளாகி சிகிச்சைபெற்று வரும் முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரனை சந்தித்து அவருடன் முதலமைச்சர் பதவிப்பிரமாணம் தொடர்பாக கலந்தாலோசிக்கவுள்ளது.

ரஜீவை சந்தித்தனர்

தமிழ்நாடு அமைச்சர்களான திருவாளர்கள் இரா. நெடுஞ்செழியன், எஸ். இராமச்சந்திரன், பொன்னையன், ஏ. கே. கிருஷ்ணசாமி, ஆர் எம். வீரப்பன் ஆகியோர் நேற்று புதுடில்லி சென்று இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தியைச் சந்தித்து, தமிழ் நாடு முதலமைச்சரின் பதவிப் பிரமாணம் தொடர்பாக ஆலோசனை நடத்தினர்கள்.

இச் சந்திப்பில் அ.தி.மு.க பொதுச் செயலாளர் திரு ப.உ.சண்முகம் கலந்துகொண்டார்.

இதுதொடர்பாக திரு எம். ஜி. ராமச்சந்திரனை சந்தித்து அவருடன் ஆலோசனை நடத்துமாறு திரு. ரஜீவ் காந்தி தமிழக அமைச்சர்களிடம் தெரிவித்திருந்தார்.

ஆளுநர் கருத்து

திரு எம்.ஜி. ராமச்சந்திரன் நாடு திரும்பிய பின்னர் முதலமைச்சராக பதவிப் பிரமாணம் செய்துகொள்ளலாமென்று தமிழ்நாடு ஆளுநர் திரு. எஸ், எல், குரானா அ.தி.மு.க பொதுச் செயலாளர் திரு ப உ. சண்முகத்திற்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு காபந்து அரசின் பதவிக் காலத்தை சுருக்கிக் கொள்ளுமாறும் இவர் அக் கடிதத்தில் கேட்டுள்ளார்.

(வெ)

"முதலமைச்சர்

பதவிப் பிரமாணத்தில் கருத்து வேற்றுமை இல்லை"

நெடுஞ்செழியன் கூறுகிறார்

புதுடில்லி ஜன 2

"தமிழ்நாடு முதலமைச்சரின் பதவிப்பிரமாணம்தொடர்பாக எமக்கிடையே கருத்து வேற்றுமை இல்லை. திரு எம். ஜி ராமச்சந்திரனே தொடர்ந்து முதலமைச்சராக இருக்க வேண்டுமென்ற தமிழ்நாடுமக்களின் அபிலாஷையை எமது கட்சி நிறைவேற்றிவைக்கும்" இவ்வாறு தமிழ்நாடு நிதியமைச்சர்திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் புதுடில்லியில் நேற்று நிருபர்களிடம் தெரிவித்தார்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

"தமிழ்நாடு முதலமைச்சரின் பதவிப்பிரமாண அரசியல் சட்ட நடைமுறைகள் பற்றி எமது கட்சி பரிசீலித்து வருகிறது:

"திரு. எம். ஜி. ராமச்சந்திரன் முதலமைச்சராக நியூயோர்க்கில் வைத்து பதவிப் பிரமாணம் செய்துகொள்ளமாட்டார்.

"பொதுத்தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு இரண்டு, மூன்று கிழமைகளின் பின்னர் முதலமைச்சராகச் சிலர் பதவியேற்ற சம்பவங்களுமுண்டு" என்றார்.

(வெ)

அகதிகள் முகாமிலிருக்க

வீடுகளில் உணவு பொருட்கள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு அகதிகள் முகாமில் உள்ள விவசாயிகள், நேற்று முன்தினம், 11 டிராக்டர்களில், தங்கள் வீடுகளுக்கு சென்றபோது பல பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதை கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

இதுபற்றி முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரனுக்கு புகார் செய்துள்ளனர் பூட்டப்பட்ட வீடுகளிலிருந்து அரிசி நெல் பெருமளவில், கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும், மாடுஆடுகோழிவாழைக்குலை, களவாடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கால்நடைகள் உணவின்றி தவிப்பதாகவும் தெரிவித்தனர்.

(க)

பதில் நீதிபதி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தின் பதில் மாவட்ட நீதிபதியாக சட்டத்தரணி திரு. எஸ். கந்தசாமி தற்போது கடமையாற்றி வருகின்றார்.

இன்று தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலில் வைகுண்ட ஏகாதசித்திருவிழாவில் இன்று தேர்த்திருவிழா. அதிகாலை சங்காபிஷேகம் நடைபெற்ற பின்னர்காலை சுவர்க்கவாயிற்தரிசன பூஜையும், நண்பகல்தேர்த்திருவிழாவும், இரவு ஏகாதசி புராண படனமும் நிகழும்

(ப)

'நவம்' விஜயம்

[சாவகச்சேரி]

முன்னாள் சாவகச்சேரி எம். பி. திரு. வீ. என். நவரத்தினம் கடந்த சனிக்கிழமை மறவன்புலவு அகதிகள் வீடமைப்புத் திட்டத்திற்கு விஜயம் செய்தார்.

அங்கு அகதிகளுக்காகக் கட்டப்படுகின்ற வீடுகளைப் பார்வையிட்டதுடன், அங்குவதியும் அகதிகளையும் சந்தித்து உரையாடினர்.

கடைகள் பூட்டப்பட்டன

[கிளிநொச்சி]

கொடிகாமத்தில் நேற்று முன்தினம் ஆயுதப்படையினர் நடந்து சென்று சோதனை நடத்தினர்கள். கொடிகாமம் சாவகச்சேரி பகுதிகளில் நேற்று கடைகள் பூட்டப்பட்டிருந்தன. சாவகச்சேரி சந்தை நண்பகலுடன் கலைந்து விட்டது.

இரத்தமில்லை நோயாளிகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசினர் ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் 14 பைந்து மட்டுமே இருப்பதால் அவசர நோயாளிகள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர்.

யாழ் ஆஸ்பத்திரிக்கு தினமும் 20 பைந் இரத்தம் தேவைப்படுகின்றது.

ஆபத்தான நோயாளிகளின் உயிரைக் காப்பாற்றுவதற்கு இரத்ததானம் வழங்குமாறு வைத்திய அத்தியட்சகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(க)

நிலக்கரி இறக்கப்படுகிறது

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்துள்ள நிலக்கரிக் கப்பல் ஒருவாறு துறைமுக மேடைக்கு அண்மையில் அணைக்கப்பட்டு இறக்குமதி வேலைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளன.

காங்கேசன்துறை சிமெந்து ஆலைக்கென 25 ஆயிரம் தொன் நிலக்கரியை ஏற்றிவந்த கப்பலை துறைமுக மேடையுடன் அணைத்து இறக்குமதியைமேற் கொள்ள காலநிலை சாதகமாக அமையாததால் இறக்குமதி தடைப்பட்டிருந்தது.

கிளிநொச்சி இணைப்பு அதிகாரி

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மாவட்ட புதிய இணைப்பதிகாரியாக மேஜர் குலதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதிபதி இடமாற்றம்

[சாவகச்சேரி]

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜனவரி மாதம் முதல் பொலனறுவை மாவட்ட நீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைப் பிரச்னை:

இந்தியா புதிய முயற்சிகளை எடுக்க வேண்டும்!

அமிர் வேண்டுகோள்

(சென்னை)

"இலங்கை இனப்பிரச்னையைத் தீர்ப்பதில் இந்தியா புதிய முயற்சிகளை எடுக்க வேண்டும்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் கூறியுள்ளார்.

'ஹிந்து' பத்திரிகைக்குவழங்கிய பேட்டியிலேயே அவர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியிருப்பதாவது; அரசாங்கம் பௌத்த சங்கத்தின் மிரட்டல்களுக்குப் பணிந்தே அதன் யோசனைகளைக் கைவிட்டது. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒத்துழைக்க மறுத்ததாலேயே தாம் யோசனையைக் கைவிட்டதாக ஜனதிபதி கூறிவருகிறார். இது முற்றிலும் தவறுதானாகும்.

திரு. அமிர்தலிங்கம் இந்திய விசேட பிரதிநிதி திரு. ஜி. பார்த்தசாரதிக்கும் இலங்கை இனபிரச்னை தொடர்பான நடவடிக்கைகளை விளக்கியிருப்பதாகக் கூறினார். அத்துடன் தொடர்ந்து தாம் அவருடன் தொடர்புகொள்ளப் போவதாகவும் கூறினர்.

சர்வகட்சி மாநாடு தோல்வியடைந்துவிட்ட நிலையில் இந்தியா இனப் பிரச்னையைத் தீர்க்கப் புதிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

(கி)

மல்லாகம் நீதிமன்றத்தில் நடந்த கொள்ளை!

(மாவிட்டபுரம்)

மல்லாகம் மாஜிஸ்திரேட் நீதிமன்றம் ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டு சைக்கிள்கள், மற்றும் வழக்குகளின் தடயப் பொருட்கள் ஆகியன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கடந்த 29ம் திகதி இரவு மேற்படி நீதிமன்றத்திற்கு வந்த இரு இளைஞர்கள் நீதிமன்ற காவலாளி தேவநாயகம்ஜேசுராஜாவை பயமுறுத்தி தடுத்து வைத்திருந்த சமயம் அங்கு லொறி ஒன்றில் ஆயுதபாணிகளானஇளைஞர்கோஷ்டியொன்று வந்ததாம்.

இக் கோஷ்டியினர் நீதிமன்றத்தை உடைத்து அங்கிருந்த 9 சைக்கிள்கள் மற்றும் வழக்குகளில் சம்பந்தப்பட்ட தடயப் பொருட்கள் ஆகியவற்றை பொதிகளாகக் கட்டியும் லொறியில் ஏற்றிக் கொண்டு சென்று விட்டார்களாம்.

இது குறித்து யாழ். பொலிசில் இயங்கும் காங்கேசன் துறை பொலிஸ் பிரிவில் புகார் செய்யப்பட்டுள்ளது.

'இரு இன்ஸ்பெக்டர்களையும் நிபந்தனையின்றி விடுதலைசெய்க'

மனித உரிமை வெகுஜன இயக்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்டு கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாகப் பணயம் வைக்கப்பட்டுள்ள இரு பொலிஸ் இன்ஸ்பெக்டர்களையும் நிபந்தனையின்றி உடன் விடுதலை செய்ய வேண்டும்' என்று கடத்தலில் சம்பந்தப்பட்ட இயக்கத்திடம் மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த இயக்கத்தின் பொதுச் சபைஅண்மையில் கூடியபோது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இயக்கத்தின் செயலாளர் திரு. சோ. தேவராசாவினால் ஜனதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

விசாரணைக்காக இராணுவத்தினரால் கைது செய்யப்படுவோர் குற்றமற்றவர்களாயின் விசாரணையின் பின்னர் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். குற்றவாளிகளாகாணும் பட்சத்தில் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும். கைது செய்யப்படுவோரின் விபரங்களை பெற்றோருக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும். இராணுவத்தினர் வீடுகளில்சோதனையிடும்போது எமது தாயகத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதத்தில் பொருட்களை சூறையாடல்

(4ம் பக்கம் 5 கலம் பார்க்க

திடீர் வேட்டையில் சிக்கிய பேக்கரிகள்!

(சுண்டுக்குளி)

கல்வியங்காட்டிலுள்ள பேக்கரி ஒன்றின் மீது திடீர் பரிசோதனையை மேற்கொண்ட விலைக் கட்டுப்பாட்டதிகாரிகள் அங்கு 390கிராம் எடையுள்ள பாணை 3 ரூபாவிற்கு விற்பனை செய்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதே தினத்தில் நகரிலுள்ள ஒரு பேக்கரி மீதும் திடீர் பரிசோதனையை நடாத்தியபோது அந்த பேக்கரி சொந்தக்காரர் 380கிராம் எடையுள்ளபாணை 3ரூபாவுக்கு விற்பனை செயதுகொண்டிருந்த போது, எகயும் மெய்யுமாக அகப்பட்டுக்கொண்டார்.

இத் திடீர் வேட்டையை உள்ளநாட்டு விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்கள பொறுப்பதிகாரி திரு எஸ். யேசுதாசன் தலையில் திரு கே. இரத்தினம்,ரி. சிவேஸ்வரத்தம்பிஏ.ரி பாலசுந்தரம் ஆகியோர் மேற்கொண்டனர்.

தரும சங்கடத்தில் சிக்குண்ட தலைவன்!

''செய்திச் சுருளில்'' என்ற தலைப்பில் டிசம்பர் 23-ல் வெளிவந்த சென்னை 'இந்து' பிரசுரத்தில் காணப்படும் கட்டுரையின் சுருக்கத்தின் தமிழாக்கம் இங்குதரப்படுகின்றது. [ஆ-ர்]

வடபகுதிப் பயங்கரவாதிகள் - யார் அவர்களை உருவாக்கினர், எவ்வாறு அவர்களை ஒழித்துவிடுவது- அண்மையில் முற்றுப்பெற்ற கொழும்பு சர்வகட்சி மாநாட்டில் இதுவே முக்கிய பிரச்னைகளில் ஒன்றாக விருந்தது.

''இலங்கை அரசே இதற்குக் காரணம் என்பது வெளிப்படை. அதன் இனவாதக் கொள்கை தமிழர் பிரச்னையைப் பாதித்த விதம் தமிழ் சதாயத்தில் அதிகரித்துவரும் போர்க்கோலத்தில் காணமுடிகிறது'' என்பதே தமிழ் தலைவர்களின் கருத்து.

பண்டாரநாயக்க மண்டபத்தில் நடைபெற்ற இம்மாநாட்டில் என்ன நடந்ததென்பதை அறியவேண்டுமானால், அங்குள்ள விருந்தைகளில் பேசப்பட்டகருத்துக்கள் உதவும். ஒன்றாக இருக்கும் தமிழர்களை நாட்டின் பல பகுதிகளிலும் குடியிருத்தி, சிறுபான்மையருக்குரிய எவ்வித பலத்தையும் சிதறடித்துச் சிங்கள ஆதிக்கத்தை உறுதிப்படுத்தல், ஒரு சாராரின் ஆலோசனை. இதனை எவ்வித்திலும் எதிர்க்கத் தமிழ் மக்களை ஒன்று திரட்டுவது மறு சாராரின் மனநிலை.

இவ்வித தீவிரவாதிகளுக்கே நடுநிலைமை கண்டு பிடிக்கும் அசாத்திய முயற்சியல் ஈடுபட்டிருக்கும் ஜனாதிபதி, பயங்கரவாதமா, அரசாங்க அடக்கு முறையா முந்தியதென்ற வினாவுக்கு விடை காண முயன்றபோது வெளிவந்த அவருடைய ஆலோசனை முன்பு இந்தியாவுடன் சேர்ந்து தயாராக்கிய ''அனுபந்தத்துக்கு மிகத் தொலைவில் காணப்பட்டது''

பழைய மாவட்ட சபைகளுக்குக் கூடிய அதிகாரம், அச்சபைகள் சில பிரதான விடயங்களில் இணைந்து செயலாற்றும் அதிகாரம் போன்ற அம்சங்களே புதுமையான திருத்தங்கள் என்று வெளியிடப்பட்டன.

வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரு தமிழ் பிரதேசத்தை அடிப்படியாகக் கொண்ட 'C' அனுபந்தத்தை ஜனாதிபதி ஏன் கைவிட்டார்?

1983-ல் நடந்த கலவரம் தமிழர்களுக்கு ஏற்படுத்திய பேரழிவு உலகெங்கும் கண்டனத்துக்குரித்தாகி நாட்டுக்கிழிவை ஏற்படுத்தியது இந்த இரத்தக் களரிக்கு என்சொல்வதென்று தெரியாது ஏங்கிய ஜே. ஆர். தமிழர் பிரச்னைக்குத் தீர்வுகாண இந்தியாவின் உதவியை வரவேற்றார். அந்த நெருக்கடியில், உருவான 'C' அனுபந்தத்தை ஏற்றார்; அதன்பின் அதனைச் செயற்படுத்தத் தவறியது இனக்குரோதத்தின் விளைவு ஜனாதிபதியா அல்லது அவரின் சகாக்களா. இந்த இனவாதத்துக்கு சரணடைந்தது தெளிவாக இல்லை.

இன்று இலங்கையில் நடக்க இருப்பதென்ன?

வடபகுதி பயங்கரவாதிகளே ஒருநல்லமுடிவைமுடக்குகின்றனர் என்று கோபங்கொள்ளும் ஜனாதிபதியும் அவருடைய பந்தோபஸ்து அமைச்சரும் தமிழ் பயங்கரவாதிகளை இறுதிப்போரில் தோற்கடிக்கத் தயாரென அடிக்கடி குரலெழுப்புகின்றனர்.

எண்பது வயதை எட்டிநிற்கும் அதிக அனுபவம்பெற்ற ஜனாதிபதி அரசியலில் பெருஞ்சாதனை நிகழ்த்த ஆசைப்படுபவர். ஆனால் அவருடைய பதவியும், அவருடைய ஆட்சியும் உயிர்தப்புவதற்கு பெரும்பாடுபடுகிறது.

நாட்டில் எதிர்ப்பு உருவாகின்றது ஆளும் கட்சியில் முரண்பாடுகள் நுழைந்து விட்டன. பொருளாதாரம் சீரழிந்து விட்டது. ஜனநாயகமுறையைக் கையாண்டு இன்னும் ஐந்து வருடம் பதவியிலிருக்க வழிதேடப்பட்டிருக்கிறது.

ஒரு உயர்மட்ட சிங்கள குடும்பத்தைச் சேர்ந்த திரு. ஜெயவர்த்தனா தம்முடைய சகாக்களுடன் மிக நட்புரிமையும், திறந்த மனத்துடன் பேசும் பண்பு கொண்டவர். மகாத்மாகாந்தி தொடக்கம் இந்திய தேசிய தலைவர்களுடன் தொடர்பு கொண்டதாகப் பேசுபவர். இத்தகைய எவராலும் இலகுவில் அளவிடப்படாத மனிதன் அண்மையில் மிகக்குறுகிய நோக்குடன் இந்தியாவுக்கு எதிரான கருத்துக் கொண்டிருப்பது ஒரு மர்மம்.

தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லையென்ற காரணத்தால் தமிழ்சமூகம் அவரில் நம்பிக்கை இழந்திருக்கிறது. அதேசமயம் தமிழர்கள் கட்டுக் கடங்காத சமூகமென்பது அவருடைய முறைப்பாடு.

தம்முடைய துன்பக்கதையை அண்மையில் அமெரிக்காவிற்கும், இங்கிலாந்திற்கும் எடுத்துச்சென்ற இலங்கை ஜனாதிபதி, இந்தியாவுக்கு விடுத்த எச்சரிக்கையில்:

''இலங்கை அரசை எதிர்த்துப் போராடும் தமிழர்களுக்கு அதிகாரம் பகிர்ந்து பரவலாக்குதலில் இந்திரா காந்திக்கு இடம் ஏதுமில்லை'' என்பதாம்.

மணிவிழாக்காணும் துர்க்கா துரந்தரி!

(சிவத்தமிழ்ச் செல்வி துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் அறுபதாண்டு நிறைவு வைபவம் இம்மாதம்7ம் திகதி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில்கொண்டாடப்படுகிறது. அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது)

எப் பொழுதும் புன்னகை பொலியும் முகம், வாயிலிருந்து சதா வெளி வந்து கொண்டேயிருக்கும் இனிய வார்த்தைகள், பொருள் பொதிந்த பேச்சு, கடமையில் எந்நேரமும் கண்ணும் கருத்துமாக இருப்பதனால் அமைதியாக அமர்ந்திராது சுறுசுறுப்புடன் ஓடி ஆடிச் செயற்படும் பாங்கு, ஆகியன, துர்க்கா துரந்தரி, துர்க்கையம்பிகையின் திருக்கோயிலை நிர்வகிக்கும் குழுவின் தங்கத்தலைவி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை அம்பிகையின் ஆலயத்தில் முதன் முதலாக சந்திக்க நேரிட்ட பொழுது என் மனதில் ஆழப்பதிந்தன. இப் பண்புகளை வரிசையாக ஒருங்கிணைத்து மனதில் நினைக்கும் பொழுதெல்லாம் இவையாவும் உரியவாறு உருண்டு திரண்டு உருவெடுத்து இவ்வம்மையார் மனக்கண்முண் நிறுத்திவிடும்.

இவரிடம் மிளிரும் சமயப் பற்று ஈடு இணைஅற்றது வேத சிவாகமங்களிலும் அவைவழி வந்த திருமுறைகளிலும் சமய சாத்திரங்கள் உணர்த்தும் தத்துவங்களிலும் அசையாத நம்பிக்கை பூண்டவர். அவ்வழி நின்றே தேவாலயத்திலும் அறம்பரிபாலிப்பவர்.

தன்னலமற்ற பணி

வாழ்க்கையில் இவர் செய்துள்ள தியாகம், அதைத் தொடர்ந்து ஆற்றிவரும் தன்னலமற்ற பணி என்னும் இரண்டும் ஏனையோருக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன. நிர்வாகத்தில் தலைமைதாங்கி பதவியை நிர்வகித்துவரும் ஒவ்வொருவருக்கும் இயல்பாக வரும் அதிகார வெறியின் பிடிக்குள் அகப்படாதவாறு சைவப்பணிக்குத் தலைமை தாங்கிச் கடமையாற்றிவருகிறார். முழுநேரத்தையும் அம்பிகையின் பணிக்கே அர்ப்பணித்தவர். தன் வாழ்க்கையையும் அதற்கேற்ப அமைத்துக் கொண்டவர். அறம், பொருள், இன்பம், வீடு, என்னும் நான்கினுள் நடுவான பொருள் இன்பம் இரண்டையும் அறவே துறந்தவர். தாம் அறவழி நின்று தாமும் பிறரும் வீடு பேறடைய வேண்டும் என்னும் நோக்குடன் நித்தியநைமித்தியங்கள் வழுவாது அம்பிகைக்கு வழிபாடு நடத்தற்கு ஆவன செய்தலே இவர்வாழ்க்கையின் உயர் இலட்சியமாக இருந்து வருகின்றது.

இவரது ஆலய நிர்வாக முறை ஏனைய தர்மகர்த்தாக்களுக்கு நல்ல எடுத்துக்காட்டு. இவர் தலைமையில் கோயிலில் பேணப்படும் தூய்மை, அங்கு கடமையாற்றுபவர்கள் நலனில் கண்ணுங் கருத்துமாய்க் கொண்டுள்ள ஈடுபாடு நித்தியநைமித்தியங்களை முறையாக நடத்தல் ஆகியன நிர்வாகி என்ற முறையில் இவரிடம் காணப்பெறும் தலையாய பண்புகள்.

சொல்லுக்கு பஞ்சமில்லை

இவரது நிர்வாகம் திறம்பட நடைபெறுவதற்கு இவருக்குப் பெரிதும் உதவுவது இவருக்கு வாக்தேவி வழங்கியருளிய பேச்சுவன்மை. சொற்களை உரியவாறு தெரிந்தெடுத்து அளவாகப் பெய்து வாக்கியங்களை அமைத்துத் தட்டுத்தடங்கலின்றி இவர் பேசும் திறன் வியத்தற்குரியது. இவரிடம் சொல்லுக்குப் பஞ்சமேஇல்லை. ஆற்றொழுக்குப்போல், சில வேளைகளில் மடைதிறந்தாற்போல், ஆயினும் சொற்களை வீண்விரயம் செய்யாதுஅளந்து அழகாக, ஓசை நயம் பயப்ப' மிடுக்கு மிளிரும் பேச்சின் வனப்பை வேறெங்குங் காணலரிது.

திருக்கோவில் நிர்வாகத்தில் அவ்வப்போது மக்களை நெறிப்படுத்தும்முகமாக இவர் அடிக்கடிவழங்கும் உரைகளில் தனிப்பட்ட சம்பிரதாயத்தையும், தெளிவையும் மெருகையும் மென்மையையும் அதேவேளையில் உறுதியையும் காணலாம். இவை நான் பங்குகொண்ட சண்டிகாஹோம வைபவத்தில் நேரே கண்டனுபவித்து இன்புற்ற அம்சங்கள்.

தேவஸ்தானத்தில்பரமகைங்கரியம்புரியும் சிவாச்சாரியருக்கும் அவரைச் சார்ந்த ஏனையோருக்கும் இவர் ஈடுஇணையற்ற மதிப்பை எப்பொழுதும் வழங்குபவர். பாரத நாட்டிலும் சரி, ஈழநாட்டிலும் சரி இந்தப் பண்பை நான் ஒரு பொழுதும் கண்டதேயில்லை.

வாழ்க இவர் சைவப் பணி.

கா. கைலாசநாதக்குருக்கள்

(இந்துநாகரீகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

யாழ். பல்கலைக்கழக பரீட்சைகள் ஜன. 17ல்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக் கழகத்தின் ஒத்திவைக்கப்பட்ட 2-ம் வருடத்திற்கான பரீட்சைகளான பொதுக்கலைப் பகுதி -1, சிறப்பு கலைப்பகுதி -1. வணிக இயல்பகுதி -1, தொழில் நிர்வாகப் பகுதி -1, ஆகியவை இம்மாதம் 17-ம் திகதி ஆரம்பமாகும்.

நுண்பாக பொருளியல் பேரீன பொருளியல் தேர்வுகள் முறையே, இம்மாதம் 17-ம், 18-ம் திகதிகளில் காலை 9 மணிக்கு நடைபெறும். மிகுதிப் பாடங்களின் தேர்வுகள் பற்றிய அட்டவணையை, பரீட்சார்த்திகள் நேரடியாக உதவி பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

கைதடி நுணாவில் பகுதியில் மின்சாரம் பாதிப்பு

[கொழும்புத்துறை]

கைதடி நுணாவில் பகுதியில் இருபதுக்கும் மேற்பட்ட வீடுகள் மின்சார விநியோகம்துண்டிக்கப்பட்ட நிலையில் இருளடைந்துள்ளன. கடந்த நவம்பர்மாதம் இருபதாம் திகதி இப்பகுதியில் இடம்பெற்ற பயங்கரக்கண்ணி வெடிகள், குண்டு வெடிச்சம்பவத்தின் போதே இம்மின் விநியோகம் துண்டுக்கப்பட்டது.

கைதடி நுணாவில் வீதியில் வைரவர் கோயிலடியிலிருந்து பாலம் வரையுள்ள பகுதியே மின் வயர்கள் அறுக்கப்பட்டுச் சேதமடைந்துள்ளன. இதனையடுத்து ஒன்றரை மாதகாலமாகியும் புதிதாக மின்னிணைப்பு வேலைகள் செய்யப்படாமையினால் பிரஸ்தாப பகுதியிலுள்ள இருபதுக்குமதிகமான வீடுகளில் உள்ளோர்மின்சாரம்இன்றிப்பெரிதும் அவதியுறுகின்றனர்.

யாழ். பகுதியில் 'ரூபவாஹினி' ஒளிபரப்பு தடைப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப் பகுதியில் கடந்த இரு தினங்களாக ரூபவாஹினி ஒளிபரப்பு தடைப்பட்டதால், மக்கள் குறிப்பாக கிறிஸ்தவமக்கள் புதுவருடதினநிகழ்ச்சிகளை பார்க்க முடியாமல் போய்விட்டது.

டிசம்பர் 31-ம் திகதி நள்ளிரவு வரை புதுவருட தினநிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும் என்று மக்கள் எதிர்பார்த்த போதிலும், அன்று ஆரம்பம் முதலே ஒளிபரப்பு தடைப்பட்டுவிட்டது.

புதுவருட தினமான 1-ம் திகதியும், ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் யாவும் தடைப்பட்டு விட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில் பிராணவாயு இல்லை சத்திர சிகிச்சை ஸ்தம்பிதம்

[யாழ்ப்பாணம்]

யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் பிராணவாயு இல்லாததினால் சத்திரசிகிச்சையாவும் தடைப்பட்டுள்ளது. உயிரை காப்பாற்ற மட்டுமே தற்பொழுது சத்திரசிகிச்சைநடைபெறுகிறது.

கோட்டை புகையிரத நிலையத்தில் யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்துசேரவேண்டிய 50 பிராணவாயுச் சிலிண்டர்கள் அனுப்பப்படாமல் இருப்பதாக கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்திற்கு பிராணவாயு சிலிண்டர்கள் ஒன்றுவிட்ட ஒருநாள் யாழ் தேவி மூலம் வந்துகொண்டிருந்தது. தற்போது யாழ்தேவிச்சேவை வவனியா மட்டும் நடைபெறுவதால் பிராணவாயு பெறுவதில் மேலும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

வவனியாவிலிருந்து வாகனங்கள் மூலம் பிராணவாயுச் சிலிண்டரை யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவர ஏற்பாடு செய்யப்படவிருக்கிறது. (க)

முல்லைத்தீவுக்கு இடமாற்றம்

[புலோலி]

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் முல்லைத்தீவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு தொண்டமானாறு கிராம அபிவிருத்திச் சங்கம் தும்பளை கிழக்கு சனசமூக நிலையம் வராத்துப்பளை இளைஞர் நன்னெறிக் கழகம் என்பன உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு கே. டபிள்யூ. தேவநாயகம் யாழ் அரச அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் ஆகியோரைக் கேட்டுள்ளன.

இரு...

(3ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி)

பெண்களை மானபங்கப்படுத்தல் ஆகியவற்றை நிறுத்த ஆவன செய்யவேண்டும்

பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தினால் வடக்கு, கிழக்குப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். போக்குவரத்து சேவை சீர்குலைந்துள்ளது. எரிபொருள் தட்டுப்பாட்டினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் இவ்வாறு பாதிக்கப்பட்ட குடும்பங்களின் துயர் துடைப்பதற்காக இப்புதிய சட்டவிதிகளை மறுபரிசீலனை செய்யுமாறு மனித உரிமைகள் இயக்கம் கோருகிறது.

சர்வகட்சி மாநாட்டுத் தீர்மானங்கள் கைவிடப்பட்டமைக்கும் இயக்கம் கவலை தெரிவித்துள்ளது.

இராணுவத்தால் கைது செய்யப்பட்ட நோயாளியான மகனை விடுதலை செய்க

அமைச்சர் 'லலித்'துக்கு தந்தை கடிதம்

(பண்டத்தரிப்பு)

இராணுவத்தினரால் கடந்த மாதம் 11-ம் திகதி பண்டத்தரிப்பு-சில்லாலை வீதியிலுள்ள தமது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்ட தமது மகன் திரு. அல்பேர்ட் ரகுநாதன் வலிப்பு நோயினால் கடந்த நான்கு வருட காலமாக பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர் என்றும், காலி பூஸா இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும்நோயாளியான இவரை மனிதாபிமான முறையில் விடுதலை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அவரின் தந்தையான பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரு. அல்போன்சஸ் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமது மகன் யாழ். அரசினர் வைத்தியசாலையில் வலிப்பு நோய்க்கு சிகிச்சைபெற்ற அத்தாட்சிக் கடிதத்தையும், வைத்திய நிபுணர் வழங்கிய சிகிச்சை பற்றிய கடிதத்தையும் தமது கடிதத்துடன் இணைத்து திரு. அல்போன்ஸஸ் தேசிய பாதுகாப்பு அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இக்கடிதத்தின் பிரதி யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

40 வருட சேவை

(சுண்டுக்குளி)

யாழ் கமநலசேவை நிலையத்தில் நிர்வாக உத்தியோகத்தராகவும், பிரதம லிகிதராகவும் 10 வருடங்கள் கடமையாற்றிய திரு. ஏ. சண்முகநாதன் தமது 40 வருட சேவையிலிருந்து நேற்று முதல் ஓய்வுபெற்றார்

இவர் கொழும்பு வவனியா, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் கடமையாற்றியுள்ளார். இவரது இடத்திற்கு திரு. எஸ். என். கந்தப்பிள்ளை அவர்கள் வவனியா கமநல சேவை நிலையத்தில் இருந்து இடமாற்றம் பெற்றுவந்துள்ளார்.

ராணி (யாழ்ப்பாணம்)
10-30, 2-00,
FUTURE WOMAN
(கண்டிப்பாக
(வயது வந்தவர்களுக்கு)

நீகல் மினி
10-15, 1-15
மோகன்-மாதவி
நடிக்கும்
பாலாஜியின்
நிரபராதி

ராஜா
10 30 2 00
ராஜீவ், சந்திரசேசர்
ரூபா
நடித்த
ஒரு தலை ராகம்
[ஈஸ்மன்கலர்]

இன்று முதல்
ஹரன் (யாழ்.நகரி)
தினசரி 10-30, 2-00,
ஜெய்சங்கர்-நிர்மலா
சுந்தரராஜன்
நீதிதேவன்
(புத்தம் புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ். நகரி
தினசரி 10-30, 2-30,
கமலஹாசன், ஸ்ரீதேவ
தாயில்லாமல்
நானில்லை
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ்)
10-30, 2-15
ரஜனிகாந்த்-ராதா-சரிதா
சில்க்-தேங்காய்-மனோரமா
சிவப்பு சூரியன்
(ஈஸ்ட்மன் கலர்(

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film -
Action packed)
வெலிங்டன்
(யாழ். நகரி)
10-30, 2-30,
சிவாஜி, கமலகாசன்,
ஸ்ரீதேவி
நடித்த
சத்தியம்
(ஈஸ்மன் கலர்)

யாழ்.லயன்ஸ் ஆராயும்

[பண்டத்தரிப்பு]

தற்போதைய சூழ்நிலைகளைபற்றி ஆராய்ந்து மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி தீர்மானிப்பதற்காக யாழ் மாவட்ட லயன்ஸ் கழகங்களின் விசேட பொதுக்கூட்டம் ஒன்று எதிர்வரும் 6ம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ் நகரிலுள்ள ஹோட்டல்ஞானம்ஸில் நடைபெறவுள்ளது

யாழ் லயன்ஸ் கழகத் தலைவர் திரு. எஸ்.அற்புதானந்தா இதற்கான ஒழுங்குகளை செய்துள்ளார்.இக்கூட்டத்தில் யாழ் மாவட்டத்திலுள்ள சகல லயன்ஸ் கழகங்களினதும் பிரதிநிதிகளையும் தவறாது சமூகமளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிள்கள் கடத்தப்பட்டன

[சாவகச்சேரி]

"சமக்கோன் கம்பனி"யில் குடிநீர் விநியோகத் திட்டத்தில் பணிபுரிந்துவரும் இரு பொறியியலாளரிடம் இருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள், இனந்தெரியாத வாலிபர்களால் கடத்திச் செல்லப் பட்டுள்ளன.

ஓய்வு பெற்றார்

[சுண்டுக்குளி]

யாழ். அரசாங்க செயலகத்தில் 8 வருடங்கள் பிரதம சிறுப்பராகப் பணிபுரிந்த திரு வேலாயுதம் நடராசா தமது 40 வருட சேவையை முடித்துக் கொண்டு ஓய்வுபெறுகின்றார்.

திருவெம்பாவைப் பூஜைகள்

(மாவிட்டபுரம்)

பொழுது புலரும்போது இடம்பெறும் திருவெம்பாவைப் பூஜைகள் தற்சமய சூழ்நிலையால் பொழுதுபுலர்ந்த பின்னரே ஆலயங்கள்தோறும் இடம்பெற்று வருகின்றன

முன்னர் இடம்பெற்றுவந்த அதிகாலை பஜனை ஊர்வலங்களையும் தற்போது காணமுடியவில்லை. அலயங்களிலேயே சிறுவர், சிறுமியர் உட்பட பல அடியார்களும் கூடிபஜனை மேற்கொண்டு வருகின்றனர்,

அரிசி விலையேற்றம்

[மாவிட்டபுரம்]

வலி. வடக்குப் பகுதியில் அரிசி விலை ஏறிவருவதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வலி. வடக்கில் கூட்டுறவுச் சங்கங்களில் அரிசி கிலோ 10 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்படுகிறது. தனியார் கடைகளில் இவ்விலை மேலும் உயர்ந்து காணப்படுகிறது.

அரிசிவிலையேற்றம் தட்டுப்பாட்டை யடுத்து தரம் குறைந்த அரிசி வகைகளும் விற்பனைக்கு வந்துள்ளன.

அரிசி விலையேற்றம் பொதுமக்களை குறிப்பாக ஏழைமக்களைப்பெரிதும் பாதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கூட்டணி கருத்து

'புதிய முயற்சி இல்லை; சந்திப்பால் பயனில்லை!'

[கொழும்பு]

இம்மாதம் 10, 11ம் திகதிகளில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவை தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்கள் சந்திப்பதற்கு ஏற்கனவே ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த போதிலும் இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான புதியமுயற்சி ஏதும் மேற்கொள்ளப்படாத பட்சத்தில் இச்சந்திப்பினால் பயன் ஏதும் இல்லையென தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்கள் கருதுகின்றனர்.

இந்திய அரசின் முன்முயற்சின்பயனாக உருவான பேச்சுவார்த்தைகளும், அதையொட்டிய சர்வகட்சி மகாநாடும் எதுவித பயனுமில்லாமல் தோல்வியில் முடிந்துவிட்ட நிலையில் தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவர்கள் ஜனாதிபதியைச் சந்திப்பதினால் ஏதும் பயன் ஏற்படப்போவதில்லையென்று கருதப்படுவதாகத் தெரிகின்றது.

தமிழர் பிரச்னையைத்தீர்ப்பதற்கான புதியமுயற்சிஏதும் எடுக்கப்படாதபட்சத்தில் இச்சந்திப்பைத் தாங்கள்மேற்கொள்ளப் போவதில்லையென தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் திரு அ அமிர்தலிங்கமும் அறிவித்துள்ளார்.

இறந்தவர் தகனத்துக்கு இடம்தேடி அலைகின்றனர்!

[பண்டத்தரிப்பு]

"மாதகல் பகுதியிலுள்ள இந்து மக்கள் இறந்தவர்களின் தகனக்கிரிகைகளை இதுவரை காலமும் மாதகல் கடற்கரைப் பகுதியிலுள்ள பொது மயானத்தில் நிறைவேற்றி வந்துள்ளனர். அரசு அமுல் நடாத்திவரும் கடல் கரையோர பாதுகாப்பு வலயத்தின் காரணமாக இந்த மயானத்தை மக்கள் பயன்படுத்த முடியாதுள்ளனர். இதனால் இப்பகுதி மக்கள் இறந்தவர்களை தகனம் செய்வதற்கு பொது இடம் ஒன்றை தேடி அலைகின்றனர். ஆகவே இக்குறையைப் போக்க தங்கள் நிர்வாகத்தின் கீழ் உள்ள விறவில் என்னும் 40 பரப்பு காணியில் ஒரு பகுதியில் இந்து மயானம் அமைப்பதற்கு ஒழுங்கு செய்து தருமாறு வேண்டுகின்றோம்".

இவ்வாறு கோரும் கடிதம் ஒன்றை மாதகல் கிராம அபிவிருத்தி சபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு அனுப்பி வைத்துள்ளது இக்கடிதத்தின் பிரதி சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

அடையாள அட்டை

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

சமாதான நீதிபதி விடுதலை

[கொழும்புத்துறை]

வெலிக்கடைச் சிறையில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த வடபகுதிச் சமாதான நீதிபதியொருவர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார்.

கைதடி வடக்கைச் சேர்ந்த மா. நாகமுத்து (வயது 33) என்னும் சமாதான நீதிபதியே கொழும்பு சென்றிருந்தபோது பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். [க]

வெளிவாரி பட்டப்பரீட்சை:

வடபகுதி பரீட்சார்த்திகளுக்கு விசேட பரீட்சை?

(கோப்பாய்)

வெளிவாரிப் பட்டப் பரீட்சைக்கு தோற்றவிருந்த வடபகுதி பரீட்சார்த்திகளின் எதிர்காலம் என்ன? விசேட பரீட்சை நடைபெறுமா? என்ற சந்தேகம் பரீட்சார்த்திகள் மத்தியில் எழுந்துள்ளது

பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் கலைமானிப்பட்டப் பரீட்சை [பீ. ஏ] விஞ்ஞான மானிப்பட்டப் பரீட்சை [பீ. எஸ். சீ] ஆகிய வற்றுக்கான பரீட்சைகள் டிசம்பர் மாதம் 10ம் திகதிதொடக்கம் 28ம் திகதி வரை வடபகுதி பரீட்சார்த்திகளிற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் நடாத்தப்படவேண்டும் என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பரீட்சை பகுதி பதிவாளரினால் அறிவிக்கப்பட்டு பின்னர் அங்கு பரீட்சை நடைபெறமாட்டாது எனினும் களனிப்பல் கலைக்கழகத்தில் அல்லதுபொல்கொல்லையில் பரீட்சை எழுதுமாறு கேட்கப்பட்டிருந்தது.

இதனால் வடபகுதி பரீட்சார்த்திகள் யாழ் அரசாங்க அதிபர் மற்றும் அரசியல் தலைவர்களுடன்தொடர்புகொண்டு தமக்கு ஏற்பட்ட நிலைமையை விளக்கி யாழ்ப்பாணத்தில் பரீட்சையை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டனர்.

அவர்களது முயற்சி பலன் இல்லாமல் போக வடபகுதி பரீட்சார்த்திகள் வேறு இடங்களிற்கு பரீட்சை எழுதச் செல்லாமல் விட்டுவிட்டனர்.

தற்போதைய நிலையில் வெளிமாவட்டங்களிற்குச் செல்வது பெருத்தமின்மையாலும், பல தினங்கள் தங்கியிருந்து பரீட்சைஎழுதுவதற்கு நிலைமை சீரில்லாததும் பேராதனைப் பல்கலைக் கழகநிர்வாகத்திற்குத் தெளிவாகத் தெரிந்திருந்த போதிலும் சம்பந்தப்பட்ட பரீட்சைபற்றி வடபகுதி பரீட்சார்த்திகளுக்கு உத்தியோகபூர்வமாக இதுவரை எதுவித விளக்கமும் அளிக்கப்படவில்லையாம்.

திட்டமிட்டபடி கலைமுதற் தேர்வு விஞ்ஞான முதற்தேர்வு (ஜி. ஏ. கியு ஜீ எஸ். கியு.) ஆகிய பரீட்சைகள் 1985ம் ஆண்டு சித்திரை மாதம் நடைபெறவிருப்பதால் அவற்றுடன் சேர்த்து கலைமானி, விஞ்ஞான மானிப்பட்டத் தேர்வும் விசேடமாக நடைபெறுமா என வடபகுதி பரீட்சார்த்திகள் சந்தேகிக்கின்றனர்.

அரசின் தரப்படுத்தலால் இலவச உயர்கல்வி வாய்ப்பு இழந்த நாம் வெளிவாரி கல்வி முறையினால் மூன்று வருடங்கள் பல்வேறு சிரமங்களை அனுபவித்த போதிலும் பரீட்சை எழுத முடியாத நிலை எமது எதிர் காலத்தின் இருண்ட தன்மையைக் காட்டுகின்றது" என் அலுத்துக்கொள்கின்றனர்.

இலக்கஞ்சி வழங்கும் திட்டம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இலக்கஞ்சி திட்டத்தை நடைமுறைப்படுத்த இரு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன

சிறுவர் சிறுமியருக்கு போஷாக்கு வழங்குவதை குறிக்கோளாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த இலக்கஞ்சி வழங்கும் திட்டத்திற்கு சில்லாலை மாதர் கிராம அபிவிருத்தி சங்கம், சண்டிலிப்பாய் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகிய இரு சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராம அபிவிருத்தி அதிகாரி திரு எஸ் பி ஜெயக்குமார் தெரிவித்தார்.

பிரார்த்தனை

[மானிப்பாய்]

கொக்குவில் மேற்கு 16-ம் வட்டார பிரஜைகள் குழுவினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான பிராத்தனையும், வழிபாடும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் ஆறுகால் மடப ஞான வைரவர் முன்றலில் நடத்தப்படவிருக்கின்றது.

மன்னார் அகதிகளுக்கு 2ம் கட்ட நிவாரணம்

(மன்னார்)

முருங்கன், உயிலங்குளம், பறப்பான்கண்டல் ஆகிய பகுதிகளில் கடந்த மாதம் 4ம் திகதி இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு இரண்டாவது கட்ட உணவுப் பொருட்கள் நிவாரணமாக வழங்கப்பட்டுவருகிறது.

பாதிக்கப்பட்ட சுமார் இரண்டாயிரம் குடும்பங்களுக்கு தலா 3 கிலோ அரிசி. 3 கிலோமா அரை கிலோ சீனி வீதம் நிவாரணம் வழங்கப்பட்டுவருகிறன.

அத்தியாவசிய சேவை ஆணையாளர் நாயகம் வழங்கிய உத்தரவையடுத்தே இரண்டாவது கட்ட உணவுப் பொருட்கள் நிவாரணமாக வழங்கப்பட்டுவருகிறது.

இந்த நிவாரணத்தை உதவி அரசாங்க அதிபர்கள் தமது பகுதி கிராம சேவை அலுவலர்கள் ஊடாக வழங்கிவருகின்றனர்

மணிவாக்கு

உறுதி குலையாத வாழ்வுக்கு இறுதி என்பது இல்லை. ஏற்றம்தான் என்றும் ஏற்படும். —கிளாட்ஸ்ரன்

நமது நோக்கு

பயணங்களும் பலாபலன்களும்

ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனா மீண்டும் இந்தியாவுக்குச் சென்று அந்நாட்டுத் தலைவர்களைச் சந்தித்துப் பேசவிருப்பதாக ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

ஜனாதிபதியின் பயணத்துக்கு முன்ஏற்பாடாக சிரேஷ்ட அமைச்சர்கள் எவரும் முன்கூட்டியே அங்கு சென்று வரவும் கூடும்.

ஆசியாவின் மிகப்பெரிய ஜனநாயக நாடொன்றின்- அபரிமிதமான மக்கள் செல்வாக்குடன் - இளம் தலைவராக பரிணமித்துள்ள திரு. ராஜீவ் காந்தி அவர்களை நேரில் சந்தித்து தமது பாராட்டுக்களைத் தெரிவித்து இருநாடுகளுக்கு மிடையிலான உறவுகளை மேம்படுத்திக்கொள்வது மட்டும் இவ்விஜயத்தின் நோக்கமாக இருக்கமாட்டாது என்பது தெளிவு.

இருநாடுகளுக்குமிடையில் சமீபகாலமாக உருவாகி வளர்ந்து வரும் பகைமைப் போக்கினைத் தணிப்பதுவே ஜனாதிபதியின் உத்தேசப் பயணத்தின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும்.

எனவே, தலைமைப்பதவியை ஏற்று இருமாதங்கள்கூட ஆகாத அனுபவமற்ற இளைஞர் என்றமுறையில் திரு. ராஜீவ் காந்தியைத் தமது முதிர்ந்த ராஜதந்திரத்தினால் படக்கித் தம்வழிக்குக் கொண்டுவந்து விடலாம் என்ற நப்பாசையுடன் நமது ஜனாதிபதி அங்கு அவசரப்பட்டுப் போகமுயல்கிறார் என்று கருதுவதும் நியாயமில்லை.

திரு. ஜயவர்தனா எவ்வளவு அறிவும், சாணக்கியமும் ஆற்றலும் பெற்றுள்ளாரோ அதே அளவுத் திறமையும், ஆற்றலும் முதிர்ச்சியுமுள்ள தலைவர்கள் ராஜீவ் காந்தியின் பக்கத்திலும் இருக்கிறார்கள். திரு. காந்தி அவர்களே ஒரு அரசியல் ஞானக்குடும்பத்தின் வாரிசு ஆவார்கள் எனவே ஜனாதிபதி அவர்களின் உத்தேசப் பயணம் உறுதிமிக்க சில அடிப்படைகளைக் கொண்டதாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

1983 ஜூலைக் கலவரங்களையடுத்து ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டுக்கு ஓடியதும், அதையடுத்து இருநாடுகளுக்குமிடையில் பதற்றமான சூழ்நிலை உருவானதும், ஜனாதிபதி அவர்கள் புதுடில்லி சென்று திருமதி இந்திராகாந்தியுடன் பேச்சுக்கள் நடாத்தி, சில உறுதிமொழிகள் அளித்துவிட்டு வந்ததும். இந்திராவின் சிறப்புத்தூதுவர் இலங்கை வந்ததும், வட்டமேசை மகாநாடு ஆரம்பமானதும், அது பல மாதங்கள் நீடித்த பின் கூம்முட்டை யானதும் இன்று உலகப் பிரசித்தம்.

அதே கதை தொடர்ந்து நீடிப்பதாயின் இம்மாதிரி விஜயங்களினால் பயனேற்படப் போவதில்லை.

ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட வாக்குறுதிகளும், தீர்மானங்களும்- அவர் சகல நிறைவெற்று அதிகாரங்களையும் பெற்றிருந்தும் கூட- செயல்படுத்த முடியாது போவதாயின்- அந்த அளவுக்கு முட்டுக்கட்டைகளை ஏற்படுத்துவதற்கு வேறு சக்திகள் ஆற்றல் பெற்றிருப்பதாயின் தனிப்பட்ட முறையில் ஜனாதிபதி அவர்கள் இனப்பிரச்னை குறித்து நடத்தும் பேச்சுவார்த்தைகளும், எடுக்கும் தீர்மானங்களும் மீண்டும் பயனளிக்காமலே போகும்!

இலங்கை தீவிரவாதிகளுக்கு தமிழ்நாட்டில் தங்க இடம் தரப்பட்டிருப்பதையே இலங்கை அரசு பெரும் பிரச்னையாக முன்வைத்துவருகின்றது. ஆனால் தமிழ்நாடடில் 40 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் தஞ்சம் புகுந்துள்ளார்கள் என்பது இந்தியாவின்கட்சி.

தீவிரவாதிகளைத் திருப்பி அனுப்பினால் இங்கு 'பயங்கரவாதம், ஒழிந்துவிடும் என்கிறது இலங்கை- இனப் பிரச்னை தீருமானால் இலங்கையர் தாமாவே திருப்பி விடுவார்கள் என்கிறது இந்தியா.

அரசியல் சூழ்நிலைமாறும் வரைக்கும் சுவிட்ஸர்லாரியில் அடைக்கலம் கோந்யுள்ள தமிழ் அகதிகள் அங்கிருந்து திருப்பி அனுப்பப் படமாட்டார்கள் என்று அந்நாட்டின் சிறப்புத் தூதுவர் இலங்கை அரசிடம் எடுத்துக் கூறியிருக்கும் செய்தி இங்கு நினைவு கூரத் தக்கது.

எனவே, இங்கு இனப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கு வெளிநாட்டினரே, குறிப்பாக இந்தியா- அதுவும் தமிழ்நாட்டினர் முட்டுக்கட்டையாக விருக்கின்றனர் என்ற சாக்குப் போக்கைவிடுத்து, உறுதியோடும், துணிச்சலோடும் நியாயமான முடிவுகளை எடுத்து நிறைவேற்ற இலங்கை அரசு முன்வரவேண்டும். இல்லையெனில் இன்றுள்ள சிக்கல் நீடிக்கவே செய்யும். உலகக் கவனத்தை ஈர்க்கும். பயணங்களாலும் பயனற்றும் போகும்.

சாவகச்சேரி...

(1ம் பக்க 4ம்கலத்தொடர்ச்சி)

குக்கூட்டுறவுச் சங்கத்தின் இரு கூட்டுறவுக்கிளைகளிலும் கொள்ளை சம்பவங்கள் நடந்ததாக தெரியவந்துள்ளது. இவ்விடங்களில் எடுக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பது செய்தி அச்சுக்குபோகும் வரை தெரியவில்லை.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு ஜனவரி மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tele phone number 22389-24126.

கரம்பன் இரட்டைக் கொலை:
கொள்ளை பற்றிய விபரம் எதுவும் தெரியவில்லை!

(வேலணை)

கரம்பனில் தனியாக வசித்து வந்த மூதாட்டியும் மகளும் கொலை செய்யப்பட்ட பின்னர் அங்கிருந்து ஏதேனும் கொள்ளையடிக்கப்பட்டனவா என்பது குறித்து இதுவரை எதுவும் தெரியவில்லை.

மூதாட்டியின் வீட்டில் இருந்த சொத்துக்கள் குறித்து இதுவரை எவருக்கும் தெரியாதிருப்பதே காரணமாகும்.

ஊர்காவற்றுறையிலுள்ள கரம்பனில் தனியாக வசித்து வந்ததாகக் கூறப்படும் திருமதி சூசைப்பிள்ளை செல்லம்மா, (வயது 71) திருமணமாகாத அவரது மகளான செல்வி நோபிள் சூசைப்பிள்ளை (வயது 46) ஆகியவர்களே கொலை செய்யப்பட்டவர்களாவர்.

இருவரதுமரணவிசாரணைகளையும் நாரந்தனைதிடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. ஜே. விஇம்மானுவல் நடாத்திஞராயினும், பிரேத பரிசோதனைகளுக்காக ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற பதில் நீதிபதி திரு. ப. கதிரவேலு உத்தரவிட்டத்தைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனை செய்தார்.

விசாரணையை மீண்டும் நாரந்தனை திடீர் மரண விசாரணை அதிகாரி நடத்தினார்.

அந்தப் படகுகள் பாவிக்க முடியாதவை!

[யாழ்ப்பாணம்]

ஊர்காவற்றுறை சுங்க இலாகாவில் கொள்ளை அடிக்கப்பட்ட இரு படகுகளும், சுங்க இலாகாவுக்கே சொந்தமானவை என்றும் பாவிக்க முடியாதநிலையில் வைக்கப்பட்டிருந்தவை என்றும் யாழ். மாவட்ட சுங்க சேகரிப்பாளர் திரு. எஸ். கணேஷ் தெரிவித்தார்.

5 ஆண்டுகளுக்கு முன்னரே இரு படகுகளிலும் துவாரங்கள் ஏற்பட்டதால் அப்படகுகளிலிருந்து மோட்டர்கள் கடற்படைமுகாமில் ஒப்படைக்கப்பட்டிருந்ததாகவும் திரு. கணேஷ் சொன்னார்.

கடந்த திங்கட்கிழமை குறிப்பிடப்பட்டுள்ள இரு படகுகளையும் இனந்தெரியாதநபர்கள் லொறி ஒன்றில் கொள்ளையடித்துச் சென்றது தெரிந்ததே. (மா)

11 இளைஞர்...

(1ம்பக்கம் 5ம்கலத்தொடர்ச்சி)

கோட்டை முன்னாள் எம்பி, கலாநிதி நீலன் திருச்செல்வம் தேசியபந்தோபஸ்து அமைச்சரைக் கேட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுபவர்களின் பெயர்ப்பட்டியலில் இந்த 11 இளைஞர்களின் பெயர்களும் இல்லை என்றும் அவர்கள் வீட்டிற்கும் வரவில்லை என்றும் கலாநிதி திருச்செல்வம் சுட்டிக்காட்டியுள்ளார்.

பண்டத்தரிப்பு பிரஜைகள் குழுத் தலைவர் டாக்டர் சுகந்தன் இன்னசித் தம்பியின் வேண்டுகோளைத் தொடர்ந்தே அவர் அமைச்சரிடம் கேட்டுள்ளார்.

இலங்கைப்...

(1ம் பக்க 3ம் கலத்தொடர்ச்சி)

கடந்த திங்கட்கிழமை வெளிவிவகார அமைச்சராகவும் பதவியேற்ற பிரதமர் திரு. ராஜீவ்காந்தி, இலங்கைப் பிரச்னைகுறித்து ஆலோசனை நடத்துவதற்காக உயர்மட்ட மாநாடு ஒன்றை கூட்டியுள்ளார். நாளை நடைபெறவுள்ள இம்மாநாட்டில் வெளியுறவு கொள்கைக்கு முத்தலைவர் திரு. ஜி பார்த்தசாரதி, இணை அமைச்சர் திரு நஜிமுதீன், அமைச்சின் செயலர் திரு. ராத்கோத்ரா ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர். இந்தமாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே திரு. சத்வால் அழைக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைகுறித்தும், சர்வகட்சி மாநாட்டின் முடிவுகள் குறித்தும் இந்தமாநாட்டில் ஆராயப்படவுள்ளது.

நாளை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்பட்டுள்ள திரு. சத்வால் நேற்று அமைச்சர்கள் திரு. லலித் அத்துலத்முதலி, ஜனாப் ஏஸி எஸ் ஹமிட், திரு. எஸ். தொண்டமான், சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, வட்டுகோட்டை முன்னாள் எம்பி. டாக்டர் நீலன் திருச்செல்வம் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியபின்னர் மாலை புதுடில்லி பயணமானார்.

இரண்டாவது...

(1-ம் பக்க5ம்கலத்தொடர்ச்சி)

வலாளிகளைப் "பயமுறுத்தியபின்னர், அங்கிருந்த கதவு, யன்னல் கண்ணாடிகளை அடித்து நொருக்கியுள்ளனர்.

இதன்பின்னர் இரவு 9 மணியளவில்வந்த மற்றொரு கோஷ்டியினர் அங்குகாவலுக்கு நின்ற ஐந்து இரவுக்காவலாளிகளை ஒரு அறையினுள் வைத்துப்பூட்டிவிட்டு. நீதிமன்றத்தின் வழக்குத்தடயப் பொருட்கள் வைத்திருக்கும் அறைக் கதவை உடைத்து அங்கிருந்த சுமார் 8 சைக்கிள்கள், சீப்பு பரல்கள், சாராய, பியர், ஸ்டவுட் போத்தல்களை, 10 ஆங்கில- தமிழ் தட்டச்சு யந்திரங்களையும் சிறிதுநேரத்தின் பின்னர் அங்குவந்த வான் ஒன்றில் ஏற்றிச்சென்றனராம்.

தமிழகத்தில்...

(1ம்பக்க 4ம் கலத்தொடர்ச்சி)

விவகாரம்குறித்து ஆராயுமாறு தமிழக புலனாய்வுத் துறை பொலிஸ் மா அதிபர் திரு. மோகனதாஸ்பணிக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக புதுடில்லியிலிருந்து அவர் பணிக்கப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்டவர்களின் மனைவிமார் அண்மையில் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு தந்திமூலம் கோரிக்கை விடுத்திருந்தது தெரிந்ததே.

ரயில்பாதை...

(1ம்பக்க 5ம் கலத் தொடர்ச்சி)

உணவுத் தட்டுப்பாடும் ஏற்படாதென்றும், அவசர்கான உணவுவகைகள் விமான, கப்பல், தரைமார்க்கமாக போதியளவு அனுப்பப்பட்டுள்ளதென்றும், இதனால் பாதிக்கப்படுபவர்கள் பொதுமக்களே என்றும் அவர் தெரிவித்தார். இருந்தும் தகர்க்கப்பட்ட பாதைகள் திருத்தப்படும்வரையில் பொதுமக்களுக்குத்தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை தடையின்றி வழங்க ஏற்பாடு செய்வோமெனவும் அமைச்சர் தெரிவித்தார். (ரா)

காருக்கு நேர்ந்தகதி!

(கோண்டாவில்)

பலாலி வீதியில் கவசவண்டிகளில் வந்த சீருடையினர் வீதியில்நின்ற காரொன்றை சேதப்படுத்தினர்.

நேற்றுமாலை திருநெல்வேலிச்சந்தியில் இடம்பெற்ற இச்சம்பவத்தின்போது காரின் சாரதி அவ்விடத்தில் இருக்கவில்லை.

அவ்விடத்தில் நின்ற வேறொரு கார்ச்சாரதியும் சீருடையினரால் அழைத்துச் செல்லப்பட்டார்.

விசாரணை நடைபெறுது?

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிமன்றம் இரண்டு தினங்களில் மூன்று தடவைகளாக சேதமாக்கப் பட்டதையடுத்து, அங்கு மீதமாகவுள்ள தஸ்தாவேஜுக்கள் யாவும் சாக்குகளில் பொதிகளாகக் கட்டி யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்கு அனுப்பப்படவுள்ளன.

அங்கு இனிமேல் வழக்கு விசாரணைகள் சம்பந்தமான எவ்விதமான கருமங்களும் நடைபெறுது எனவும் தெரியப்படுகின்றது. [க,

மரண அறிவித்தல்

திருமதி மேர்லி மருதமணி அரியநாயகம்

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த திருமதி மேர்லி மருதமணி காலமானார். அன்னார் றெஜினோல்ட் அரியநாயகத்தின் அன்பு மனைவியும், சாரதா, சத்தியா (U. K), ஆகியோரின் அன்புத் தாயாரும், டாக்டர் இராஜன் விஜயரட்னத்தின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னரின் பூதவுடல் வியாழக்கிழமை (3-1-85) காலை 9-00 மணிக்கு கோப்பாய், சென். மேரிஸ் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

[1210]

மரண அறிவித்தல்

திரு. தம்பிப்பிள்ளை பொன்னுத்துரை

திரு தம்பிப்பிள்ளை பொன்னுத்துரை காலமானார் இவர் தங்கமுத்துவின் அன்புக் கணவரும், நடேச பெருமாள் [அபுதாபி] திருமதி உத்திரா விக்கிரமசிங்கம் [U K.] திருமதி கமலினி பாலகணேசன், திருமதி பத்மினி மனோகரன் [ஆசிரியை, அத்தியார் இந்துக் கல்லூரி. நீர்வேலி], திருமதி ஸ்ரீகாந்தன் [கமநல சேவை நிலையம், கோப்பாய்] காலஞ்சென்ற திலகவதி, பாக்கியலட்சுமி, சத்தியதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்கிரமசிங்கம் [U K], பாலகணேசன் [யா. ஐ. வி. ச.], மனோகரன், ஸ்ரீகாந்தன் ஆகியோரின் மாமனாரும் ஆவர். அன்னாரது ஈமக்கிரியைகள் 3-1-1985 வியாழன் அன்று பி.ப.1-00 மணியளவில் அன்னாரது கோப்பாய் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும் [1211]